செ.வெ.எண்: 01/ 2021 நாள்: 01.07.2021

## திருப்பூர் மாவட்டம்

# மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ரூ.20.47 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார் !!!

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியம், மெட்ராத்தி ஊராட்சி பகுதிகளில், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் ரூ.20.47 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.07.2021) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

திருப்பூர் மாவட்ட ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் கிராம ஊராட்சி பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியம், மெட்ராத்தி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலம் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் மெட்ராத்தி அண்ணாநகர் பகுதியில் ரூ.9.70 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கீரீட் தளம் அமைக்கும் பணியனையும், பணத்தம்பட்டியில் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் மூலம் ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் பயனாளிக்கு கட்டப்பட்டு வரும் வீட்டினையும், தாசர்பட்டியில் ஜல் ஜீவன் 2020-2021 திட்டத்தின் கீழ் ரூ.3.84 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறு குடிநீர்த்திட்டப்பணிகளையும் மற்றும் தாசர்பட்டி குக்கிராமத்தில் ரூ.4.83 இலட்சம் மதிப்பீட்டில் 56 வீடுகளுக்கு தனித்தனியாக குழாய் மூலம் குடிநீர் வழங்குதல் பணியினையும் என மொத்தம் ரூ.20.47 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக, மடத்துக்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டு உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுக்கள் குறித்து விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.கீதா, மடத்துக்குளம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி செயற்பொறியாளர், உதவி பொறியாளர் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**